நிதி (ஓய்வூதியம்) துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை.9.

<u>கடித எண்.49854/ஓய்வூதியம்/10–1, நாள். 2.11.10</u>

அனுப்புநர்
திரு. ம. பத்மநாபன், பி.காம்.,
அரசு கூடுதல் செயலாளர்.

பெறுநர்
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

அய்யா,

பொருள்: ஓய்வூதியம் – 1.1.2006 முதல் திருத்திய ஓய்வூதியம் – தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள் – திருத்திய ஊதிய நிர்ணயப்படி திருத்திய பணிக்கொடை வழங்குதல் – தெளிவுரை வழங்கப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை எண்.235, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள். 1.6.09.
2. அரசுக் கடித எண். 41473/நிதி (ஊதியக் குழு) துறை/ 2009–1, நாள்.31.12.07.
3. மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்களின் ந.க.எண்.47194/2007/அ2, நாள்.7.3.10.

------

பார்வை 1–ல் காணும் அரசாணையில் அரசு ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் 1.1.2006 முதல் கருத்தியலாகவும் 1.1.2007 முதல் பணப் பயனாகவும் திருத்தி ஆணையிடப்பட்டது.

2. பார்வை 2–ல் காணும் கடிதத்தில், குற்றச்சாட்டிற்கு குந்தகமின்றி அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டு, தற்காலிக ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கும் திருத்திய ஊதிய நிர்ணயப்படி தற்காலிக ஓய்வூதியத்தை திருத்தம் செய்யலாம் என தெளிவுரை வழங்கப்பட்டது.

3. மேற்காணும் கடிதத்தின்படி திருத்திய ஊதிய விகிதத்தின் அடிப்படையில் தற்காலிக ஓய்வூதியம் திருத்தம் செய்யப்பட்டவர்களின் திருத்திய தற்காலிக பணிக்கொடையினை, தனியர்களால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் அரசுக்கு சேரவேண்டிய நிலுவை தொகைகளை நிறுத்தி வைத்து, மீதித் தொகையை 3 தவணைகளில் (நாளது தேதியில் இரண்டு தவணைகள் மற்றும் 2011–12–ல் ஒரு தவணை) வழங்கலாம் என தெளிவுரை வழங்கப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு கூடுதல் செயலாளருக்காக

நகல்
நிதி (ஊதியக் குழு) துறை, சென்னை–9.
முதன்மை செயலாளர்/கருவூலம் மற்றும் கணக்கு துறை ஆணையர், சென்னை–15.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.